*11*

# வாழ்க்கை ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு மனிதன்

## (2 இராஜாக்கள் 5:1–17)

*வேதாகமம் ஒரு கண்ணாடியைப்போல் வாழ்க்கையை பிரதிபலிக்கிறது. இதன் பக்கங்களினூடே நடந்து செல்லும் வண்ணமயமான நபர்களை நாம் கவனிக்கும்போது, நாம் நம்மை சுற்றிலுமுள்ளவர்களை - ஏன் நம்மையும் கூட பார்க்கிறவர்களாயிருக்கிறோம். நாகமானுடைய கதையில், அவன் நோயுற்றது, சுகத்தை தேடினது மற்றும் தேவனுடைய "மருந்து சீட்டு" அவனுக்கு ஒத்துக்கொள்ளாமல் போனது என சுவாரசியமான பல பிரதிபலிப்புகளைப் பார்க்கிறோம். நாகமான் அமைதியாகி இறுதியில் தீர்வை ஏற்றுக்கொண்டது போல் சிலர் காண்பிக்கப்படுவதை நாம் காண முடியுமென நான் நம்புகிறேன்.*

### *நோய் கண்டறிதல் (5:1)*

***"அவனோ குஷ்டரோகியாயிருந்தான்"***

*நாகமான் பற்றிய ஒரு விவரிப்போடு கதை துவங்குகிறது. அவன் "சீரிய ராஜாவின் படைத்தலைவனாக இருந்தான்" (வசனம் 1அ). நாம் அவனை "நான்கு நட்சத்திரம் பெற்ற ஒரு தளபதியாக" நினைத்து பார்க்கலாம். "தன் ஆண்டவனிடத்தில் அவன் பெரிய மனுஷனாயிருந்தான்" (வசனம் 1ஆ). பெர்க்கிழி மொழிபெயர்ப்பு, "அவன் முக்கியமான அதிகாரியாயிருந்தான்" என கூறுகிறது. அவன், "அதிகமாய் மதிக்கப்படத்தக்கவனாயிருந்தான்" (வசனம் 1இ). நாம் பார்க்கிறபடி, அவன் தன் சக ஊழியர்களால் மதிக்கப்பட்டான் - அன்புகூரப்பட்டான். "அவனைக் கொண்டு கர்த்தர் சீரியாவுக்கு இரட்சிப்பை கட்டளையிட்டார்" (வசனம் 1ஈ). அவன் ஒரு அவிசுவாசியாக இருந்தபோதும், தேவன் அவன் மூலமாய் கிரியை செய்திருக்கிறார். "அவன் மகா பராக்கிரம சாலியாக இருந்தான்" (வசனம் 1உ). அவன் போர் முனையில் பின்னால் நின்று ஆணையிடும் தலைவனாக இருக்கவில்லை. அவன் போரில் முன்னால் நின்று சண்டையிட்டு தனது தைரியத்தை நிரூபித்திருக்கிறான்.*

*"அவனோ" (ஆனால்) என்ற அந்த சிறிய வார்த்தைக்கு வருகிற வரையிலும் நாம் நாகமானின் மேல் பொறாமை கொள்ள சோதிக்கப்படுவோம். அந்த சிறிய எதிர்மறையான இடைச்சொல் எவ்வளவு சுலபமாக பிறரைப் பற்றிய நமது எண்ணத்தை மாற்றிவிடுகிறது!*

- *"அவர் 'ஒரு நல்ல மனிதர்தான்,' ஆனால் அவர் ஒரு கெட்டக்கோபக்குணத்தைக் கொண்டிருந்தார்."*
- *"அவள் 'ஒரு நல்ல பெண்தான்,' ஆனால் அவளால் தன் நாக்கைக்*

கட்டுப்படுத்த முடியாது."

- "அவருக்கு அருமையான தாலந்து இருக்கிறது மற்றும் அவர் கர்த்தருக்கு ஒரு பயனுள்ள ஊழியக்காரராக இருக்க முடியும், *ஆனால்* அவர் உலகத்தை வெறுக்க மறுக்கிறார்."
- "அவர் 'ஒரு சிறந்த பிரசங்கியார்தான்,' *ஆனால்* அவர் தான் பிரசங்கிக்கிறபடி வாழ்வதில்லை."

நாகமானின் விவரிப்பின் கடைசியை பாருங்கள்: "அவனோ குஷ்டரோகியாயிருந்தான்" (வசனம் 1ஊ). இது ஒரு ஓவியர் மிக அழகான ஒரு முழு உருவப்படத்தை வரைந்தபின் தன் தூரிகையை கருப்பு வண்ணக் கலவையில் தோய்த்து, அந்த அழகிய உருவப்படம் முழுவதும் தெளித்து, அதின் அழகைக் கெடுத்துவிட்டதுபோலிருக்கிறது.

குஷ்டரோகம் பண்டைய உலகில் மிகவும் பயப்படக்கூடிய ஒரு வியாதி யாக இருந்தது. இஸ்ரவேலில், குஷ்டரோகிகள், "தீட்டு, தீட்டு!" என சத்தமிட வேண்டும் - அப்போது மக்கள் அந்த வழியிலிருந்து விலகிப்போய் விடுவார்கள் (லேவியராகமம் 13:45ஆ). குஷ்டரோகம் முதலில் தோன்றியபோது தோலில் மாற்றம் உண்டாகி, முடிவில் தோல் முழுவதும் நிறம் மாறிவிடுகிறது. உடல் உறுப்புகளின் ஓரங்களில் இவை உருவாகிறது. நோய் முற்றின நிலையில் சிறிது சிறிதாக, பாதிக்கப்பட்ட பகுதிகள் இற்று விழுந்து விடுகின்றன. விரல்கள், கால் பெருவிரல், காதுகள் அல்லது மூக்கும் கூட இல்லாத குஷ்டரோகிகளைப் பார்ப்பது என்பது ஒரு வழக்கத்திற்கு மாறான ஒரு காரியமாக இருப்பதில்லை.

நாகமானின் மீது எவ்வளவு தான் சிறப்புகள் குவிக்கப்பட்டாலும், ஒரு உண்மை மாறுவதில்லை: அவன் ஒரு குஷ்டரோகியாயிருந்தான். அவன் மேல் பொறாமைப் படுவதற்கு பதிலாக, சீரியா நாட்டின் கடைநிலை அடிமை கூட அவனுக்குப் பதில் அவனுடைய இடத்தில் இருப்பதற்கு மறுத்திருப்பான்.

**"நீயோ ஒரு பாவியாயிருக்கிறாய்"**

இன்று நாம் அதை செயல்படுத்தக் கூடுமா? சபையின் ஆரம்ப நாட்களிலிருந்து, குஷ்டரோகமானது பாவத்தின் உருவகமாக கருதப்பட்டது. வாரன் வையர்ஸ்பி என்பவர்,

> குஷ்டரோகம் என்பது பாவத்தின் ஒரு காட்சியாக/படமாக இருக்கிறது என கூறும் நேரடியான வசனக் கூற்றுகள் இல்லாவிட்டாலும், நீங்கள் லேவியராகமம் 13ஆம் அதிகாரத்தை வாசிக்கையில் நீங்கள் அவைகளுக்கிடையிலான தெளிவான ஒப்புவமைகளை காணலாம். குஷ்டரோகத்தை போல, பாவமும் தோலைத் தாண்டி ஆழமாய் செல்கிறது (வசனம் 3), அது பரவுகிறது (வசனம் 7), அது தீட்டுப்படுத்துகிறது (வசனம் 45), அது தனிமைப்படுத்துகிறது (வசனம் 46) மற்றும் அது முற்றிலும் சுட்டெரிக்கப்படுவதற்கேதுவானதாயிருக்கிறது (வசனங்கள் 52, 57).[1]

மற்றவர்களும் சில ஒப்புவமைகளை கவனித்திருக்கிறார்கள். கீழ்வரும் கருத்துக்கள் குருமாச்சார் என்பவரின் நூலிலிருந்து எடுத்தாளப்படுகிறது:

*இதை விட தெளிவான மற்றும் குறிப்பான ஒரு அடையாளத்தை பாவத்திற்காக நாம் கண்டுபிடிக்கமுடியாது. அதின் குணமாக்கபடமுடியாத நிலை - சாதாரண முயற்சிகள் மூலம் நம்மை நாமே இரட்சித்துக் கொள்ள முடியாதவர்களாயிருக்கிறோம் என்பது உணர்த்துகிறது. இதின் தொற்றிக்கொள்ளும் தன்மை ஒரு பாவியான மனிதன் இன்னொரு பாவியின்மேல் கொண்டிருக்கும் பொல்லாத செல்வாக்கை காண்பிக்கிறது. அதின் வெறுக்கப்படும் தன்மை எல்லா பாவமும் தேவனுடைய பார்வையில் எவ்வளவு அருவருப்பாய் இருக்கிறதென்பதை நினைவுபடுத்துகிறது. குஷ்டரோகத்தால் பாதிக்கப்பட ஒருவர் பாளையத்திலிருந்து புறம்பாக்கப்பட்டு இஸ்ரவேல் ஜனங்களிடத்திலிருந்து பிரித்து வைக்கப்பட்டான்.*[2]

*"உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் அதிலே சுகமேயில்லை; அது காயமும், வீக்கமும், நொதிக்கிற இரணமுமுள்ளது ..." (ஏசாயா 1:6அ) என்று ஏசாயா இஸ்ரவேலின் பாவத்தை குறித்து எழுதினபோது அவர் குஷ்டரோகத்தை மனதில் வைத்து எழுதியிருக்கலாம்.*

*பாவத்திற்கும் குஷ்டரோகத்திற்குமிடையில் வித்தியாசங்கள் இருக்கின்றன. தொழுநோய் ஒரு சிறிய விழுக்காடு மக்களை மட்டும் பாதிக்கும் வேளையில், பாவம் தங்கள் செயல்களுக்கு பொறுப்பேற்கும் நிலையிலுள்ள ஒவ்வொருவரையும் தொற்றிக்கொள்கிறது (ரோமர் 3:23). மேலும் ஒருவர் குஷ்டரோகியான போது, அது அந்த நபருக்கும் மற்றவர்களுக்கும் வெளிப்படையாக தெரிந்தது. ஆனால் பலர் இன்று தாங்கள் பாவிகளாக இருப்பதையும், தேவ கிருபை தேவைப்படும் நிலையில் இருப்பதையும் அறியாதிருக்கிறார்கள்.*

*நீங்கள் இன்னும் தேவனுடைய கிருபைக்கு உங்களை உட்படுத்தாதவரானால், உங்கள் ஆவிக்குரிய நிலையை குறித்து சிந்தித்து பாருங்கள். பவுல் தான் கிறிஸ்துவுக்குள் வருவதற்கு முன்பு இருந்த வாழ்க்கையை பின்வரும் வார்த்தைகளில் படம் பிடித்து காட்டுகிறார். "அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில் நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன் ... ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன்" (ரோமர் 7:18, 19). பவுலுடைய வார்த்தைகளில் நீங்கள் உங்களை பார்க்க முடிகிறதா? நீங்கள் செய்ய விரும்புகிற நன்மையை நீங்கள் எப்போதாவது செய்ய தவறுகிறீர்களா? நீங்கள் செய்துவிட்ட சில காரியங்களுக்காக வெட்கப்படுகிறீர்களா? வேதாகமம் அந்த காரியங்களை "பாவம்" என அழைக்கிறது மற்றும் வேதாகமம் அந்த பாவங்கள் உங்கள் ஆத்துமாவை ஆக்கினைக்கு உட்படுத்திவிடும் என பறைசாற்றுகிறது (ரோமர் 6:23).*

*நாகமான் பல நல்ல குணாதிசயங்களை உடையவராக இருந்தான், ஆனால் "அவனோ குஷ்டரோகியாயிருந்தான்" என்ற ஒரு மோசமான உண்மைக்கு முன்பாக அவைகள் ஒன்றுமில்லாமல் போய்விட்டன. ஒரு வேளை நீங்கள் பாராட்டிற்குரிய பல நல்ல குணாதிசயங்களை உடைய ஒரு ஆணாக அல்லது ஒரு பெண்ணாக அல்லது ஒரு வாலிபப்பருவத்தினராக இருக்கலாம்; "ஆனால் நீங்கள் ஒரு பாவியாக இருக்கிறீர்கள்" என்ற ஒரு தப்ப முடியாத சத்தியத்திற்கு முன்பாக, உங்கள் நித்தியத்தை தீர்மானிக்கிற பிரச்சனைக்கு முன்பாக அந்த*

*சிறப்புகள் எல்லாம் மறைந்துவிடுகின்றன. நாகமான் தன் நிலையை குறித்து அறியாதவராக இருந்திருந்தால், தீர்க்கதரிசியை கண்டுபிடிப்பதற்கான அந்த பயணத்தை ஒருபோதும் மேற்கொண்டிருக்கமாட்டார். அதுபோல், நீங்களும் நான் ஒரு இழந்துபோன, என்னை நானே இரட்சித்துக் கொள்ள முடியாத ஒரு பாவி என்பதை ஒத்துக்கொள்ளாத வரையிலும் - நீங்கள் இரட்சிப்பை பெறுவதற்காக ஒருபோதும் கர்த்தரிடம் திரும்ப மாட்டீர்கள்.*

## *"மருந்து சீட்டு" (5:2-12)*

***ஒரு பரிந்துரை***

*வசனம் 2இல் நாம் இஸ்ரவேலைச் சேர்ந்த ஒரு சிறு பெண்ணிடம் அறிமுகப்படுத்தப்படுகிறோம். "சீரியாவிலிருந்து தண்டுகள் புறப்பட்டு, இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஒரு சிறு பெண்ணைச் சிறைபிடித்துக் கொண்டு வந்திருந்தார்கள்" (வசனம் 2அ). ஒரு சிறு பிள்ளையின் ஆற்றல் மற்றும் செல்வாக்கை ஒருபோதும் குறைத்து மதிப்பிடாதீர்கள். "அம்மா, தயவு செய்து எங்களோடு சபைக்கு வாருங்கள்!"; "அப்பா தயவு செய்து புகைப்பிடிப்பதை நிறுத்தி விடுங்கள்!" என்ற அவர்களுடைய மகன் அல்லது மகளின் வேண்டுகோளால் பல பெற்றோர்கள் திருந்தியிருக்கிறார்கள்.*

*இந்த யூதச் சிறுமி "நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தாள்" (வசனம் 2ஆ). அவள் கோபம் மற்றும் துக்கமாக இருப்பதற்கு, தன் எஜமானியை பகைப்பதற்கு மற்றும் விசுவாசத்தை இழந்து விடுவதற்கும் கூட பல காரணங்கள் இருந்தன. அவள் இதில் எதையும் செய்யவில்லை. பழிவாங்குவதை விரும்புவதற்கு பதிலாக, நாகமானுக்காக அவள் இருதயம் பரிதவித்தது (காண்க ரோமர் 12:19-21). ஒரு நாள், "அவள் தன் நாச்சியாரைப் பார்த்து: என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும்; அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார்" என்றாள் (2 இராஜாக்கள் 5:3). "சமாரியாவிலிருக்கிற அந்த தீர்க்கதரிசி" எலிசாவாக இருந்தார். சிறுமியின் விசுவாசம் அப்படியே நிலைத்திருந்தது, நம்பிக்கை இருக்கிறது என்பதை நாகமான் அறிந்து கொள்ள வேண்டும் என சிறுமி விரும்பினாள்.*

*நீங்கள் இன்னும் தேவனிடத்தில் திரும்பாதவர்களாக இருந்தால், நீங்கள் இழந்துபோனவர்களாக இருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்வது மிகவும் அவசியமாக இருக்கிறது; ஆனால்* நம்பிக்கை *இருக்கிறது என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதும் முக்கியமானதாக இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் (வெளிப்படுத்தின விசேஷம் 1:6; காண்க 1 யோவான் 1:7)! கழுவப்படுதல் கிடைக்கக்கூடியதாக* <u>இருக்கிறது</u> *(காண்க யோவான் 15:3; எபேசியர் 5:26)!*

> *நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் ... அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது*

(எபேசியர் 1:3-7) என பவுல் எழுதினார்.

ஒருவேளை நீங்கள் இந்த சத்தியத்தை ஒரு சிறுவனிடமிருந்து கேட்டிருக்கலாம் அல்லது ஒரு நண்பரிடமிருந்து அல்லது ஒரு அயலகத்தாரிடமிருந்து கேள்விப்பட்டிருக்கலாம் அல்லது இதை முதன் முறையாக கேள்விப்பட்டுக்கொண்டிருக்கலாம். நீங்கள் யார் மூலம் கேள்விப்பட்டிருந்தாலும் சரி, அதை விசுவாசியுங்கள்!

எது என்னுடைய பாவத்தை கழுவமுடியும்?
இயேசுவின் இரத்தம் தானே;
எது என்னை மறுபடியும் பூரணமாக்க முடியும்?
இயேசுவின் இரத்தம் தானே.[3]

நீங்கள் கர்த்தரை நேசித்து, விசுவாசித்து கீழ்ப்படியும்போது (காண்க கலாத்தியர் 3:26, 27), அந்த விலையேறப்பெற்ற இரத்தத்தால் உங்கள் "பாவங்கள் கழுவப்படும்" (நடபடிகள் 22:16; காண்க மாற்கு 16:16; நடபடிகள் 2:38)!

சிறு பெண்ணின் வார்த்தைகள் நாகமானுக்கு சொல்லப்பட்டன; அவன் அதை ராஜாவுக்கு தெரிவித்தான் (2 இராஜாக்கள் 5:4). இந்த சிறு பெண்ணின் வார்த்தைகள் மிகவும் வினயமாக எடுத்துக் கொள்ளப்பட்டது என்பது அவளுடைய நற்குணத்தை பற்றி அதிகம் பேசுகிறது. அவள் தன் குடும்பம் மற்றும் தன் மக்களை விட்டு பிரிந்திருந்தாள். ஆனால் அவள் இன்னமும் ஒரு தேவனுடைய பிள்ளையைப்போல நடந்து கொண்டிருந்தாள். அவள் தன் உண்மைத்தன்மையை பராமரித்திருந்தாள்!

**பதிலுரைப்பு**

ஆயத்தங்கள் உடனே செய்யப்பட்டன. சீக்கிரமாக, நாகமான் ராஜாவிடமிருந்து பெற்றுக்கொண்ட ஒரு கடிதம், நூற்றுக்கணக்கான தாலந்து விலையேறப்பெற்ற உலோகங்கள் மற்றும் தமஸ்குவின் மிகச் சிறந்த கடைகளில் வாங்கப்பட்ட வஸ்திரங்களோடு புறப்பட்டான் (வசனம் 5).

நாகமான் தன் பயணத்தை துவங்குவதை நாம் பார்க்கும் போது, மக்கள் தங்கள் இரட்சிப்பு தொடர்பாக செய்யும் பொதுவான தவறுகள் எனக்கு நினைவுக்கு வருகின்றன. நாகமானுடைய அடிப்படை தவறு என்னவென்றால், *அவன் தேவனுடைய சித்தத்தை செய்ய முயற்சித்தான் - ஆனால் அதை மனித வழியில் செய்ய முயற்சித்தான்.* உதாரணமாக, அவன் சுகத்தை விலை கொடுத்து வாங்கிவிட முடியுமென நினைத்தான். இன்றும் அநேகர் தங்கள் இரட்சிப்பை விலைகொடுத்து "வாங்க" அல்லது நற்கிரியைகளால் அதை "சம்பாதிக்க" முடியும் என சிந்திக்கிறார்கள் - ஆனால் ஒருவரும் ஒருபோதும் இரட்சிப்பை சம்பாதிக்கும் அளவுக்கு நல்லவர்களாக இருக்கமாட்டார்கள் அல்லது போதுமானதை செய்யக் கூடியவர்களாக இருக்க மாட்டார்கள் (காண்க எபேசியர் 2:8, 9; வெளிப்படுத்தின விசேஷம் 22:17). மேலும் நாகமான் முதலில் தவறான ஒரு நபரிடத்தில் செல்லக்கூடியவராக இருந்தான். தீர்க்கதரிசியிடத்தில் செல்வதற்கு பதிலாக ராஜாவிடத்தில் செல்லக்கூடியவராக இருந்தார் (காண்க 2 இராஜாக்கள் 5:6). அவ்விதமாகவே, பலர் தவறான மத அதிகாரங்களிடம் செல்

*லக் கூடியவர்களாக இருக்கிறார்கள். தவறாத தேவனுடைய வார்த்தையிடம் செல்வதற்கு பதிலாக, குறைகள் நிறைந்த மனிதருடைய பாரம்பரியங்களிடம் செல்லக் கூடியவர்களாக இருக்கிறார்கள் (காண்க மத்தேயு 15:1-9).*

*நாகமானும் அவனைச் சேர்ந்தவர்களும் சமாரியாவுக்கு வந்து சேர்ந்த போது, சீரியா ராஜாவின் கடிதம் இஸ்ரவேல் ராஜாவிடம் கொடுக்கப்பட்டது. செய்தி இதுவாகத்தான் இருந்தது: "இந்த நிருபத்தை உம்மிடத்தில் என் ஊழியக்காரனாகிய நாகமான் கொண்டுவருவான்; நீர் அவன் குஷ்டரோகத்தை நீக்கிவிட அவனை உம்மிடத்தில் அனுப்பியிருக்கிறேன்" என்று எழுதியிருந்தது (2 இராஜாக்கள் 5:6). "இஸ்ரவேலின் ராஜா அந்த நிருபத்தை வாசித்தபோது, அவன் தன் வஸ்திரத்திரங்களைக் கிழித்துக்கொண்டு: 'ஒரு மனுஷனை அவன் குஷ்டரோகத்தினின்று நீக்கிவிட வேண்டும் என்று, அவன் என்னிடத்தில் நிருபம் அனுப்புகிறதற்கு, கொல்லவும் உயிர்ப்பிக்கவும் நான் தேவனா?' " என்று கூறினான் (வசனம் 7அ). அதில் ஒரு கெட்ட எண்ணம் இருந்ததாக மட்டுமே ராஜாவால் பார்க்க முடிந்தது; யுத்தம் செய்வதற்கான ஒரு முகாந்தரத்தை சீரியா ராஜா தேடினதாக அவன் நினைத்தான். "இவன் என்னை விரோதிக்க சமயம் தேடுகிறான் என்பதை சிந்தித்துப் பாருங்கள்" என்றான் (வசனம் 7ஆ).*

*இங்கே இதுதான் நடந்திருக்க* வேண்டும்*: ராஜா சிரித்துக் கொண்டே, "பாராட்டிற்கு நன்றி, ஆனால் இந்த விஷயத்தில் உதவி செய்யக்கூடியவன் நான் அல்ல. நீங்கள் இந்த பட்டணத்தின் எல்லையில் ஒரு சிறிய வீட்டில் வசித்து வரும் எலிசா தீர்க்கதரிசியிடம் செல்ல வேண்டியது அவசியம்" என சொல்லியிருக்க வேண்டும். அந்த சாத்தியக்கூறு அவனிடத்தில் உருவாகவில்லை. ஒரு சிறிய எபிரேய அடிமைச் சிறுமி தேவனுடைய தீர்க்கதரிசியை பற்றி சிந்தித்தாள், ஆனால் தேவனுடைய ஜனங்களின் மேல் ராஜாவாயிருந்தவன் அதை சிந்திக்கவில்லை.*

***தீர்வு***

*ராஜாவின் துன்பச் செய்தி எலிசாவை எட்டியது மற்றும் நாகமான் தன்னிடம் அனுப்பப்படும்படி தீர்க்கதரிசி கேட்டுக்கொண்டார் (வசனம் 8). "அப்படியே, நாகமான் தன் குதிரைகளோடும் தன் இரதத்தோடும் வந்து எலிசாவின் வாசற்படியிலே நின்றான்" (வசனம் 9). தீர்க்கதரிசியின் தாழ்மையான இருப்பிடத்தை பரிவாரங்கள் வந்து சேர்ந்தபோது, ஏற்பட்ட குதிரைகளின் காலடிசத்தம், இரதங்களின் இரைச்சல், மற்றும் தோலுடையின் சத்தம் ஆகியவற்றை உங்களால் கேட்க முடிகிறதா? நாகமான் தனது மின்னும் உடைகளுடன், பெருமைவாய்ந்த இடுப்பு கச்சையுடன் அவனுடைய உலோகம் மற்றும் தோலால் ஆன ஆயுதம் மற்றும் தலைகவசத்தோடு தீர்க்கதரிசி தன் வருகையை கவுரவத்தோடு ஏற்றுக்கொள்ள வேண்டுமென தன் இரதத்தில் பெருமையுடன் அமர்ந்திருப்பதை நீங்கள் பார்க்கிறீர்களா?*

*எலிசா தன் வீட்டிலிருந்து வரவில்லை. ஒருவேளை நாகமான் தன் வருகையை அறிவிக்க எக்காளத்தை ஊதும்படி செய்திருக்கலாம். இருப்பினும் எதுவும் நடக்கவில்லை. இறுதியாக, ஒரு கதவு திறக்க ஒரு வேலைக்கார மனிதன் வெளியே வந்தான் (வசனம் 10அ). அவன் நீவப்படாத தாடி, கிழிந்துபோன மற்றும் ஒட்டுப்போட்ட அங்கியுடன் இருந்தான் என நான் காட்சிப்படுத்துகிறேன். அந்த செய்தியாளர் நாகமானை பார்த்து, "நீ போய்,*

யோர்தானில் எழுதரம் ஸ்நானம்பண்ணு; அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய்" என்றான் (வசனம் 10ஆ).

ஏன் எலிசா தாமே வெளியே வரவில்லை? அவர் ஒருவேளை மற்ற காரியங்களில் அலுவலாயிருந்திருக்கலாம், ஆனால் அவர் நாகமானை குஷ்டரோகத்திலிருந்து குணப்படுத்த விரும்பியது போலவே, அவன் பெருமையிலிருந்தும் அவனை குணப்படுத்த விரும்பினார் என்று நான் நினைக்கிறேன். தேவன் வெறுக்கிற காரியங்களின் பட்டியலில் பெருமை முதலாவது இடத்திலிருக்கிறது (நீதிமொழிகள் 6:16-19; காண்க KJV).

**எதிர்செயல்**

எளிமையான அறிவுரைகளை கேட்டபோது, நாகமான் மிகவும் அதிகமாய் சந்தோஷப்பட்டாரா? இல்லை, அவர் "மிகவும் கோபப்பட்டார்" (2 இராஜாக்கள் 5:11அ). NIV மொழிபெயர்ப்பு "அவர் கோபப்பட்டார்" என்று கூறுகிறது; "அவன் கடுங்கோபம் கொண்டான், உருமினான்" என CEV மொழிபெயர்ப்பு கூறுகிறது. நாகமான் எல்லாவற்றையும் மறந்து விட்டு வீட்டிற்குச் செல்ல ஆயத்தமாயிருந்தான் (வசனம் 11ஆ). அவன் சீரியாவிலிருந்து புறப்பட்டு வந்தபோது அவன் மாம்சம் அழுகி விழுந்து கொண்டிருந்தது, அவன் அதே நிலையில் திரும்பி செல்வான். எவ்வளவு சோகமானது!

நாகமான், "அவன் வெளியே வந்து நின்று, தன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை தொழுது, தன் கையினால் அந்த இடத்தை தடவி, இவ்விதமாய்க் குஷ்டரோகத்தை நீக்கிவிடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன்" என்றான் (வசனம் 11இ). எலிசா இப்படித்தான் செய்வார் என அவன் தன் மனதில் சில காரியங்களை திட்டம்பண்ணி வைத்திருந்தான்; தீர்க்கதரிசி ஒரு மந்திரத்தை முணுமுணுத்து சீரியாவில் கள்ள தீர்க்கதரிசிகள் செய்வது போல - விநோதமாக கையை அசைப்பார் என நினைத்திருந்தான். நாகமான் இன்னும் "தேவனுடைய சித்தத்தை மனிதனுடைய வழியில்" செய்வதில் பிடிவாதமாக இருந்தான்.

"நான் இப்படி நினைத்திருந்தேன்" என்பது ஒரு மனிதனுக்கு தொல்லைகளை கொண்டுவரும். நான் சிறுவனாயிருந்தபோது, சில பட்டாசுகளை வாங்கினேன். ஒரு பட்டாசின் பின் முனையில் ஒரு காற்றாடி பொருத்தப்பட்ட இயந்திரம் இருந்தது. அந்த காற்றாடி சுற்றி, அந்த கருவியை *முன்னோக்கி உந்திதள்ளிவிடும்* என "நான் நினைத்தேன்." எங்கள் வீட்டு கொல்லைபுறத்தில் வெடிகளைப் பற்றவைத்தேன். அங்கே நிறைய மரங்களும் கொஞ்சம் வெற்றிடமும் இருந்தது. காலியிடத்தை நோக்கி போகும்படி, ஒரு மரத்தின் கீழ் அந்த பட்டாசை வைத்து, திரியை பற்றவைத்தேன். அது முன்னோக்கி பாய்ந்து செல்வதற்கு பதிலாக *மேல் நோக்கி* சென்று, ஒரு மரக்கிளையில் மோதி, திரும்பி கீழ்நோக்கி இறங்கி வந்து, தரையில் மோதி, எனது இரண்டு கால்களுக்கு நடுவாக பறந்து வந்து வெடித்து சிதறியது. இப்படித்தான் இந்த பட்டாசு வெடிக்கும் என "நான் நினைத்திருந்தது," எனது கால் சட்டையில் இரண்டு ஓட்டைகளை போட்டதோடு, இந்நாள் வரையில் இருக்கக்கூடிய இரண்டு சூட்டுக்கொப்புள தழும்புகளையும் உருவாக்கிவிட்டது.

மனநல ஆலோசகர்கள் நாகமானின் இந்த எண்ணங்களை "சுயமாய் தனக்குதானே பேசுதல்" என அழைப்பார்கள்: இது ஒரு மனிதன் தன்னிடத்தில் தானே பேசிக்கொள்வதாகும். உங்கள் "தனக்கு தானே பேசுதல்" தவறானதாகவும்

தவறான தகவல்களின் அடிப்படையில் அமைந்ததாக இருக்குமானால் அது பெரும் தீங்கை விளைவிக்கும். நான் சில பரிதாபமான மக்களிடத்தில் பேசியிருக்கிறேன். அவர்கள் என்னிடம் இப்படிக் கூறினார்கள். “எனக்கு திருமணம் நடந்த போது என் வாழ்க்கை இப்படி இருக்கும் அல்லது அப்படி இருக்கும் என நினைத்தி ருந்தேன்.” துக்கமாயிருந்த சிலருக்கு நான் ஆலோசனைகள் வழங்கியபோது, அவர்களும் இப்படித்தான் சொன்னார்கள்: “எனக்கு ஒரு வேலை கிடைத்த போது, நான் இப்படி நினைத்திருந்தேன் ... அல்லது இந்த குழந்தை பிறந்த போது ... அல்லது நான் பிரசங்கிக்க துவங்கினபோது ... எல்லாம் சிறப்பாக இருக்கும் என நினைத்திருந்தேன்.” இதில் மிகப்பெரிய துயரம் என்னவென்றால், மக்கள் *மதரீதியாக* தவறாக வழிநடத்தப்பட்ட “தனக்கு தானே பேசுதல்” என்ற இந்த தவறுக்குள் சிக்கிக் கொள்வதுதான்: “ஆம் வேதாகமம் (இதை அல்லது அதை) போதிக்கிறது என்பதை நான் அறிவேன் - ஆனால் நான் எனது பெற்றோர் அல்லது எனது பிரசங்கியார் எனக்கு என்ன போதித்தார்களோ அதி லேயே நிலைத்திருப்பேன்.” டோனால்ட் பார்ன்ஹவுஸ் இவ்விதம் கூறுகிறார், “ஒவ்வொருவரும் தேவனுடைய வழியில் பரலோகம் செல்வதற்கும் அல்லது தன் சுயவழியில் நரகம் செல்வதற்குமான சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறார்கள்.”[4]

நாகமான் இன்னும் கத்திக்கொண்டிருந்தான்: “நான் ஸ்நானம்பண்ணிச் சுத்தமாகிறதற்கு இஸ்ரவேலின் தண்ணீர்கள் எல்லாவற்றைப் பார்க்கிலும் தமஸ்குவின் நதிகளாகிய ஆப்னாவும் பர்பாரும் நல்லதல்லவோ என்று சொல்லி உக்கிரத்தோடே திரும்பிபோனான்” (வசனம் 12). உலகத்தின் அந்த நதிகளைப் பார்த்தவர்கள் யோர்தானின் கலங்கலான தண்ணீரை விட தமஸ்குவின் “பொன்நிற ஓடைகள்”[5] விரும்பி தெரிந்தெடுக்கத் தக்கவைகள் என்பதை ஒத்துக்கொள்கிறார்கள். நாகமான் தன்னுடைய பெருமையை விட்டு விட்டு, தீர்க்கதரிசி கூறியதை செய்வதற்கு பதிலாக, இந்த சந்தர்ப்பத்தை, எந்த நதி சிறந்தது என்று ஒரு நதிநீர் போட்டியை கிளப்புவதற்கு பயன்படுத்தினார்.

நாகமான் செய்த தவறு மதவட்டாரத்தில் ஆண்டுகளாக திரும்ப திரும்ப செய்யப்பட்டு வருகிறது: “ஒரு குழந்தை வளர்ந்து பெரியவனாகி கர்த்தரை நிராகரித்து தன் ஆத்துமாவை இழந்துவிடும் வாய்ப்பைக் கொடுப்பதற்குப் பதில், அந்த குழந்தைக்கு குழந்தை ‘ஞானஸ்நானம்’ கொடுப்பது நிச்சயமாகவே சிறந்ததாய் இருக்கிறது”; “மக்களை தண்ணீரில் மூழ்கி அவர்கள் முழுவதும் நனையும்படி செய்வதைக்காட்டிலும், ஒரு சில சொட்டுகள் தண்ணீரை அவர்கள் மேல் தெளித்து ‘ஞானஸ்நானம்’ கொடுப்பது சிறந்ததாய் இருக்கிறது.” நாகமானுக்கும் மற்றும் அவன் செய்த தவறை திரும்ப செய்கிற யாவருக்குமான என்னுடைய பதில் மிகவும் எளிமையானது: தேவன் என்ன கட்டளையிட்டுள்ளாரோ அதை, துல்லியமாக அவர் எப்படி செய்யவேண்டு மென்று சொல்லியிருக்கிறாரோ அதை அப்படியே செய்வதைக் காட்டிலும் “சிறந்தது” வேறு ஒன்றுமில்லை (மத்தேயு 7:21; லூக்கா 6:46; காண்க ஏசாயா 55:8, 9)!

“ஆகவே நாகமான் உக்கிரத்தோடே திரும்பிபோனான்” (வசனம் 12ஆ). அநேகமாக அவன், எலிசா வீட்டை விட்டு வெளியே வந்து, தன்னை ஒரு முக்கியமான ஆள் என்று அங்கீகரிக்காததை அவன் ஒரு அவமானமாக எடுத்துக்கொண்டான். அழுக்கு தண்ணீரில் தன்னை போன்ற ஒரு பெரிய ஆள் மூழ்க வேண்டுமென்ற ஆலோசனை தனக்கு சொல்லப்பட்டதால்,

*தான் தரக்குறைவாக நடத்தப்பட்டதாக அவன் நினைத்திருந்தான். அவன் "மருத்துவரிடம்" சென்றிருந்தார். ஆனால் அவருடைய "மருந்து சீட்டை" அவர் விரும்பவில்லை. ஆகவே அவருக்கு கோபம் வந்தது. எப்படியிருந்தாலும் அவனுடைய கோபம் உண்மை நிலையை மாற்றவில்லை; அவன் இன்னும் "உயிரோடு செத்துக்கொண்டிருந்தான்."[6] நான் எனது குளியல் அறையிலுள்ள எடை பார்க்கும் இயந்திரத்தின் மேல் கோபப்படலாம், ஆனால் அது எனது அதிக எடை பிரச்சனையைத் தீர்க்காது. ஒரு காற்றுமானியில் மேல் கோபப்படுவது, வரும் புயலை தடுத்து நிறுத்தாது. மிகவும் முக்கியமாக, ஒரு சுவிசேஷ பிரசங்கியார் மேல் கோபப்படுவது நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்கள் வாழ்க்கையை அவருக்கு ஒப்புக்கொடுக்கும் அவசியத்திலுள்ள ஒரு பாவி என்ற உண்மையை மாற்றியமைக்காது.*

## *சுகமாகுதல் (5:13-17)*

***தேவனுடைய வல்லமையினால் சுகமாக்கப்பட்டார்!***

*"அவன் ஊழியக்காரர் சமீபத்தில் வந்து பேசியபோது" (2 இராஜாக்கள் 13ஆ), நாகமானின் புனிதப்பயணம் அழிவை நோக்கி சென்றுகொண்டிருந்தது. அவர்கள், "அவனை நோக்கி, தகப்பனே, அந்த தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தை செய்ய உமக்கு சொல்லியிருந்தால், அதை நீர் செய்வீரல்லவா? ஸ்நானம்பண்ணும், அப்பொழுது சுத்தமாவீர் என்று அவர் உம்மோடே சொல் லும் போது, அதை செய்ய வேண்டியது எத்தனை அதிகம் என்று சொன்னார்கள்?" (வசனம் 13ஆ). ஊழியக்காரர் அவனிடத்தில் பேசியது அவர்கள் குணங்களைக் காட்டுகிறது: அவர்கள் தங்கள் எஜமானுக்காக கரிசனைப்பட்டார்கள். இது அவர்களுக்கு நாகமானோடு இருந்த உறவைப் பற்றியும், நாகமானை பற்றியும் அதிகம் கூறுகிறது. பல எஜமான்கள் "இந்த இடையூறை" வெறுத்திருப்பார்கள், அநேகமாக அவர்கள் "துணிவுக்காக" அவர்களை தண்டித்தும் இருப்பார்கள். எப்படியிருந்தாலும், இவர்கள் நாகமானோடு தாராளமாக பேசமுடியும் என்பதை உணர்ந்தார்கள், நாகமானும் அவர்களுக்கு செவிகொடுக்க விருப்பமுள்ளவனாயிருந்தான்.*

*அவர்கள் உண்மையில் கூறியது என்னவென்றால், "நீங்கள் பலம் பொருந்திய எதிரியோடு நேரடியாக சண்டையிடுங்கள் அல்லது ஒரு காட்டு விலங்கோடு சண்டையிடுங்கள் என்று கூறியிருந்தால் என்ன செய்திருப்பீர்கள்? அவர் தன் தேவனுக்கு தங்கத்தினால் ஒரு நினைவு சின்னத்தை எழுப்புங்கள் என்று சொல்லியிருந்தால் என்ன செய்திருப்பீர்கள்? இந்த சாபத்திலிருந்து உங்களை விடுவித்துக் கொள்வதற்கு,* எதை வேண்டுமானாலும் *செய்வதற்கு நீங்கள் விருப்பமுள்ளவர்களாய் இருந்திருக்க மாட்டீர்களா? அப்படியிருக்கும் போது, அவர் செய்யும்படி கூறிய, இந்த சுலபமான காரியத்தை நீங்கள் ஏன் செய்யக்கூடாது?"*

*சிலர் பாவத்தின் குற்றத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்கு எதை வேண்டுமானாலும் மற்றும் எல்லாவற்றையும் - அதாவது கர்த்தருடைய எளிய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதை தவிர எதை வேண்டுமானாலும் மற்றும் எல்லாவற்றையும் செய்ய மனதாயிருப்பது எனக்கு எப்போதும் புரிந்து கொள்ள முடியாத ஒரு புதிராகவே இருக்கிறது.*

*பேதுரு அவர்களை நோக்கி, "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்பிற்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள்" (நடபடிகள் 2:38).*

*"இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானாஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" என்றான் (நடபடிகள் 22:16).*

*நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனு டைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே (கலாத்தியர் 3:26, 27).*

தேவனானவர் உங்களை "ஒரு பெரிய காரியத்தை" செய்யும்படி கூறினால், அதை செய்யமாட்டீர்களா? "ஸ்நானம் பண்ணி, சுத்தமாகு என்று அவர் கூறும்போது, அதை செய்வது எத்தனை அவசியமாயிருக்கிறது?"

வேலைக்காரரின் வார்த்தைகள், நாகமானை அவன் எலிசாவின் சுகமாக்குதலை முயன்றுபார்க்காமல் வீட்டிற்கு செல்வது மதியீனமான தாயிருக்கும் என உணரவைத்தது. இவ்விதமாக அவன், "யோர்தான் நதியில் இறங்கினான்" (2 இராஜாக்கள் 5:14அ). அவன் ஆற்றங்கறையில் நின்று, தன் உடைகளை களைந்து தண்ணீரில் இறங்குவதை உங்களால் பார்க்க முடிகிறதா? அவன் தண்ணீருக்குள் மூழ்கி பின் எழுந்து நின்றான். அவன் தன் கைகள் மற்றும் மார்பகத்தை பார்த்தான், ஆனால் அவன் மாம்சம் இன்னமும் தொழுநோயால் பாழ்ப்பட்டதாகவே இருந்தது. அவன் முகத்தில் ஏமாற்றம் காணப்பட்ட போது, அவன் வேலைக்காரரில் ஒருவன் கரையில் நின்றபடி, "அது ஒரு தரம்தான், தீர்க்கதரிசி 'ஏழு முறை' மூழ்கும்படி கூறியிருக்கிறார் என்று கத்தினான்."

வசனப்பகுதி நமக்கு உணர்த்துவது என்னவென்றால், நாகமான் ஒருமுறை மூழ்கின போது ஏழில் ஒரு மடங்கு அவன் சுகமாகவில்லை; மற்றும் அவன் இருமுறை மூழ்கினபோது, ஏழில் இருமடங்கு சுகமாகவில்லை. மாறாக, எந்த ஒரு சுகமும் கிடைப்பதற்கு முன்பாக அவன் ஏழு முறை மூழ்க வேண்டியிருந்தது. குருமாச்சார் என்பவர் இவ்விதம் கூறுகிறார், "அவன் ஒரு முறை மூழ்கினான், எந்த பயனும் இருக்கவில்லை; இரண்டாம் முறை மூழ்கினான், தொழுநோய் அகலவில்லை; மறுபடியும், மறுபடியும் மற்றும் மறுபடியும் மூழ்கினான், நிலமை அப்படியேதான் இருந்தது."[7] ராலிசன் என்பவர் பின்வருமாறு எழுதியுள்ளார், "எந்த ஒரு விளைவு/முடிவும் தெரியாமல், ஒரு காரியத்தை ஆறுமுறை திரும்ப திரும்ப செய்வது, மறுபடியும் விடாமுற்சியோடு ஏழாவது முறை அதை திரும்ப செய்வதற்கு, மனிதர்களிடம் பெரும்பாலும் இல்லாமலிருக்கிற, பெரிய அளவு விசுவாசமும் நம்பிக்கையும் தேவைப்படுகிறது."[8]

வேலைக்காரர்கள் ஆற்றங்கரையில் நின்று, "ஒன்று ... இரண்டு ... மூன்று ..." என்று எண்ணுவதை நான் கற்பனை செய்கிறேன். இறுதியாக, நாகமான் ஏழாவது முறையாக தண்ணீருக்கடியில் சென்றான். "தேவனுடைய மனுஷன் வார்த்தையின்படியே யோர்தானில் ஏழுதரம் முழுகினபோது" என வசனம்

கூறுகிறது (வசனம் 14ஆ). ஏழாவது முறை அவன் தண்ணீருக்கடியில் மூழ்கினபோது, அவன் மாம்சத்தில் கூச்சம் ஏற்பட்டதா? அவன் ஒரு புதிய உயிர் நாளங்களின் வழியாக பாய்ந்தோடியதை பார்த்தானா? அவன் தன்னுடைய பெலன் புதுப்பிக்கப்பட்டதை உணர்ந்தானா?[9] எனக்கு தெரியாது, ஆனால் அவன் தண்ணீரில் இருந்து வந்தபோது, "அவன் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைபோல[10] மாறி, அவன் சுத்தமானான்" என வசனம் கூறுகிறது (வசனம் 14இ). அடுத்த முறை நீங்கள் ஒரு குழந்தையை காணும்போது, அதின் மிருதுவான, இனிய மற்றும் பழுதற்ற தோலை கவனியுங்கள். நாகமானின் மாம்சம் அப்படி இருந்தது! ஒரு எழுத்தாளர் "புதிய நாகமானை" இவ்விதம் விவரிக்கிறார்:

> ... அவன் முகம் ஜொலித்தது மற்றும் அவன் கண்கள் ஒளிவீசின, இளமையும் வலிமையும் திரும்பியது; அவனுடைய அழுகிய மாம்சம், தோல் செதில்கள் தண்ணீர் வெள்ளத்தின் கீழ் மறைந்து, அவன் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை ஆரோக்கியமான மற்றும் ஒரு சிறு பிள்ளையின் மாம்சத்தைப் போல மிருதுவான மாம்சம் உருவாயிற்று![11]

நாகமான் தீர்க்கதரிசியிடம் திரும்பி சென்று, இந்த உணர்வுப்பூர்வமான அறிக்கையை செய்தான்: "இதோ, இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத் தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன்" (வசனம் 15ஆ). அந்த தண்ணீர் தன்னை சுத்தமாக்கவில்லை என்பதை நாகமான் புரிந்துகொண்டார். யோர்தானின் தண்ணீருக்கு தொழுநோயைக் குண மாக்கும் வல்லமை இருந்திருக்குமானால், அவன் உலகெங்கிலுமிருந்து வந்துள்ள தொழுநோயாளிகள் கூட்டத்தில் முண்டி அடித்து சென்றிருக்க வேண்டிய அவசியம் இருந்திருக்கும். மாறாக, *தேவன்* இஸ்ரவேலின் தேவன் - உண்மை யான தேவன் - அவரால் சுகமாக்கப்பட்டதை அவன் உணர்ந்திருந்தான் - அவரையே சேவித்துப் பணிய அவன் உறுதிமொழி எடுத்தான் (வசனம் 17ஆ).

### தேவனுடைய கிருபையால் காப்பாற்றப்பட்டான்!

மறுபடியுமாக, கர்த்தருக்கு கீழ்ப்படிவது தொடர்பாக, நாம் நமது சொந்த சமன்பாடுகளை உருவாக்கலாம். கர்த்தர், பாவம் என்ற "தொழுநோயால்" சபிக்கப்பட்ட மனிதன் விசுவாசிக்க வேண்டும் (யோவான் 3:16; எபேசியர் 2:8), மனந்திரும்ப வேண்டும் (லூக்கா 13:3; நடபடிகள் 17:30), இயேசுவிலுள்ள விசுவாசத்தை அறிக்கை செய்ய வேண்டும் (மத்தேயு 10:32; ரோமர் 10:9, 10), மற்றும் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறவேண்டும் என கட்டளையிட்டுள்ளார் (மாற்கு 16:16; நடபடிகள் 2:38). இதற்கு பதில ளிக்கும் விதமாக, ஒரு பாவி விசுவாசிக்கிறார். அவர் நான்கில் ஒரு பகுதி சுத்தமாகிவிட்டாரா? இல்லை, கர்த்தர் அவர் மனந்திரும்ப வேண்டும், அறிக்கை செய்யவேண்டும் மற்றும் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்பதையும் கட்டளையிட்டுள்ளார். அவர் மனந்திரும்புகிறார். அவர் ஒன்றில் பாதி அளவு சுத்தமாகிவிட்டாரா? இல்லை, அவர் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற வேண்டும் என்றும் கர்த்தர் கூறியுள்ளார். அவர் இயேசு கிறிஸ்து ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என விசுவாசிப்பதாக அறிக்கையும் செய்கிறார்.

*அவர் நான்கில் மூன்று பகுதி சுத்தமாகிவிட்டாரா? இல்லை, கர்த்தர் ஞானஸ்நானத்தையும் கட்டளையிட்டுள்ளார். ஒரு பாவி தன் இருதயத்தில் விசுவாசமுடையவராக ஞானஸ்நானமாகிய தண்ணீர் கல்லறைக்குள் சென்று வெளியே வரும்போது (காண்க ரோமர் 6:3, 4), ஒரு சிறு குழந்தையின் ஆத்து மாவைப்போல சுத்தமானதாக அது கழுவப்படுகிறது (நடபடிகள் 22:16; காண்க மத்தேயு 18:3)! அவர் கிறிஸ்துவுக்குள் புதிதான ஜீவனை உடையவராக இருக்கிறார் (ரோமர் 6:4); மற்றும் அவர் ஒரு புதிய சிருஷ்டியாக இருக்கிறார் (2 கொரிந்தியர் 5:17)!*

*ஞானஸ்நானத் தண்ணீரில் வல்லமை இருக்கிறது என்பது அதின் அர்த்த மாயிருக்கிறதா? யோர்தான் நதியின் தண்ணீரில் வல்லமை இல்லாதது போல, இதிலும் வல்லமை இல்லை. தேவனானவர் சுத்திகரிக்கிறார். அவர் மாத்திரமே அந்த வல்லமையை உடையவராக இருக்கிறார் மற்றும் அவர் மாத்திரமே அந்த உரிமை/அதிகாரம் உடையவராக இருக்கிறார். எப்படியிருப்பினும், தன் ஊழியக்காரனாகிய எலிசா சொன்னபடி, துல்லியமாக அவன் சொன்னபடி - நாகமான் செய்த போதுதான் - தேவன் அவனை சுகமாக்கினார். அப்படியே, நீங்கள் அவர் கேட்டுக்கொண்டபடி செய்யும்போது - நீங்கள் அவர் தன்னு டைய வசனத்தில் சொல்லியபடி துல்லியமாக செய்யும்போது, உங்கள் பாவக்குற்றத்திலிருந்து உங்களை கழுவி சுத்திகரிப்பதாக தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளார்.*

## முடிவுரை

*தேவன் நாகமானை அவன் தொழுநோயிலிருந்து குணமாக்க, படிப்படியாக அவர் செயல்பட்டவிதம் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக, அவனை தன்னுடைய விசுவாசியாக மாற்ற அவர் செயல்பட்ட விதம் ஆகியவற்றை சிந்திக்கையில் அது ஆச்சரியமாக இருக்கிறது. எப்படியிருந்தாலும், நாகமான் இந்த தொடர் நிகழ்ச்சியில் எதாவது ஒரு கட்டத்தில் தேவனுடைய திட்டத்தை தோற்கடித்திருக்கக் கூடும். தீர்மானம் எடுக்கிற நிலைக்கு உங்களை கொண்டுவருவதற்கு உங்கள் வாழ்க்கையில் சம்பவித்த எல்லாவற்றையும் நினைத்துப்பாருங்கள். கர்த்தருடைய கரத்தை உங்களால் காண முடிகிறதா; அவருடைய கரிசனையை உங்களால் காணமுடிகிறதா? தேவனானவர் உங்கள் பாவம் என்னும் தொழுநோயை குணமாக்க விரும்புகிறார் (காண்க 2 பேதுரு 3:9); இருப்பினும், நாகமான் தனக்கான தேவனுடைய திட்டத்தை தோற்கடிக்க வாய்ப்பு இருந்தது போல, நீங்களும் செய்யக்கூடும். டிவிட் எல் மூடி என்பவர் பின்வருமாறு எழுதியுள்ளார். நாகமான், "கோபத்தை இழந்தார்; பின் தன் பெருமையை இழந்தார்; பின்னர் தன் தொழுநோயை இழந்தார்; மேட்டிமையான, முரட்டாட்டமான பாவிகள் பொதுவாக இந்த படிமுறையில் தான் மனமாற்றத்திற்குள் வருகிறார்கள்."[12] பெருமை நீங்கள் கீழ்ப்படியக்கூடாதபடி தடுத்துக் கொண்டிருக்குமானால், இன்றே அதை விட்டுவிடுங்கள். "தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்ற சத்தியம் இன்றும் உண்மையுள்ளதாயிருக்கிறது (லூக்கா 14:11). மனத்தாழ்மை, விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலோடு இன்றே கர்த்தரிடம் திரும்புங்கள்!*

குறிப்புகள்

[1]Warren W. Wiersbe, *Be Distinct* (Colorado Springs, Colo.: Victor, 2002), 37. [2]F. W. Krummacher, *Elisha, a Prophet for Our Times* (Grand Rapids, Mich.: Kregel Publications, 1993), 147. [3]Robert Lowry, "Nothing but the Blood," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [4]Quoted in Wiersbe, 38. [5]Henry Blunt, *Lectures on the History of Elisha* (Philadelphia: Herman Hooker, 1839), 93; J. Robert Vannoy, notes on 2 Kings, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 532. [6]This phrase is from Charles Swindoll, "Naaman and Gehazi: Characters in Contrast," radio sermon, n.d. [7]Krummacher, 149. See Elaine J. Fletcher, *Elisha, the Miracle Prophet* (Washington, DC: Review and Herald Publishing Association, 1960), 48. [8]G. Rawlinson, "2 Kings," *The Pulpit Commentary,* vol. 5, *1 & 2 Kings,* ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 94. [9]*இந்த வாக்கியமும் இதற்கு முந்தைய இரு வாக்கியங்களும் குருமாச்சூர் என்பவரால் கூறப்பட்டது, 150.* [10]*நாகமான் தொழுநோயால் தன் உடலின் பாகங்கள் எதையும் இழந்திருந்தால், அவைகளும் அவனுக்கு "திரும்ப வந்துவிட்டன" என்பதை இந்த வார்த்தை உணர்த்துகிறது.*

[11]Krummacher, 150. [12]Quoted in Wiersbe, 39.

## எலிசாவின் காலத்தில் அரசாண்ட மன்னர்கள்

| யூதாவின் இராஜாக்கள் | இஸ்ரவேலின் இராஜாக்கள் | சீரியாவின் இராஜாக்கள் |
|---|---|---|
| யோசபாத் *(கி.மு. 873-48)* | ஆகாப் *(கி.மு. 874-53)* | பெனாதாத் I *(கி.மு. 895-60)* |
| யோராம் *(கி.மு. 848-41)* | அகசியா *(கி.மு. 853-52)* | பெனாதாத் II *(கி.மு. 860-42)* |
| அகசியா *(கி.மு. 841)* | யோராம் *(கி.மு. 852-41)* | |
| அத்தாலியா *(கி.மு. 841-35)* | யெகூ *(கி.மு. 841-14)* | ஆசகேல் *(கி.மு. 842-798)* |
| யோவாஸ் *(கி.மு. 835-796)* | யோவாகாஸ் *(கி.மு. 814-798)* | |
| | யோவாஸ் *(கி.மு. 798-783)* | |

*(தேதிகள் தோராயமானவைகள், இந்த பாடங்களில் வரும் பெனாதாத் என்பவர் பெனாதாத் II ஆக இருக்கிறார்.)*